# 2020 பொதுத்தேர்தல் மற்றும் பொது வாக்கெடுப்புகளில் வாக்களிப்பதற்கான உங்களுடைய வழிகாட்டி.



ELECTORAL COMMISSION
TE KAITIAKI TAKE KŌWHIRI

E231 08/20 Tamil

## 2020 இல் எதை எதிர்பார்க்கலாம் என்பதையும் வாக்களிக்கும் முறையையும் புரிந்துகொள்ளுங்கள்.

**நீங்கள் பதிவுசெய்ததையும் உங்களது விவரங்கள் புதுப்பித்த நிலையில் இருப்பதையும் உறுதிப்படுத்தவும்.**

வாக்களிக்க, நீங்கள் பதிவுசெய்ய வேண்டும். நீங்கள் 18 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருந்தால், நியூசிலாந்து குடிமகன் அல்லது நிரந்தரக் குடியிருப்பாளராக இருந்தால், மேலும் நியூசிலாந்தில் தொடர்ந்து 12 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் உங்களது வாழ்க்கையில் ஏதேனும் ஒரு கட்டத்தில் வாழ்ந்துள்ளீர்கள் என்றால் நீங்கள் பதிவுசெய்ய வேண்டும்.

### விரைவாகவும் எளிதாகவும் வாக்களிக்க முன்னதாகவே பதிவுசெய்ய வேண்டும்

நீங்கள் செப்டம்பர் 13 ஞாயிறுக்குள் பதிவுசெய்தால், தேர்தல் நாளுக்குச் சுமார் 2 வாரங்களுக்கு முன்பு தபாலில் EasyVote தொகுப்பைப் பெறுவீர்கள்.

எப்போது வாக்களிக்கலாம், யாருக்கு வாக்களிக்கலாம் என்பதை EasyVote தொகுப்பு உங்களுக்குத் தெரிவிக்கும். உங்களது தொகுப்பில் உங்களுடைய தனிப்பயனாக்கப்பட்ட EasyVote அட்டையையும் இருக்கும், இது வாக்களிப்பை விரைவுபடுத்தும் மற்றும் எளிதாக்கும்.

தேர்தல் நாள் உட்பட, செப்டம்பர் 13 ஆம் தேதிக்குப் பிறகும் நீங்கள் பதிவுசெய்யலாம், ஆனால் உங்களுக்கு EasyVote அட்டை கிடைக்காது. நீங்கள் சிறப்பு வாக்களிப்பையும் அளிக்க வேண்டும், ஆனால் அதற்கு அதிகநேரம் எடுக்கும்.

### உங்களுடைய விவரங்களை ஆன்லைனில் பதிவுசெய்யவும், சரிபார்க்கவும் அல்லது புதுப்பிக்கவும்

உங்களுடைய நியூசிலாந்து ஓட்டுநர் உரிமம், நியூசிலாந்து கடவுச்சீட்டு அல்லது RealMe சரிபார்க்கப்பட்ட அடையாளத்தைப் பயன்படுத்தி ஆன்லைனில் பதிவுசெய்தல், சரிபார்த்தல் அல்லது புதுப்பித்தல் எளிது. **vote.nz**-க்குச் செல்லவும்

**அக்டோபர் 3 முதல் நீங்கள் எந்த வாக்களிக்கும் இடத்திலும் பதிவுசெய்யலாம் அல்லது இந்த வழிகளில் ஒன்றில் பதிவுப் படிவத்தைக் கேட்கலாம்:**

- **0800 36 76 56 என்ற எண்ணை அழையுங்கள்**
- **உங்கள் பெயர் மற்றும் முகவரியை 3676 என்ற எண்ணுக்கு இலவசமாக உரைச்செய்தி அனுப்புங்கள்.**

### முன்னதாகவே வாக்களியுங்கள்

2020 பொதுத் தேர்தல் மற்றும் பொது வாக்கெடுப்புகள் தற்போது அக்டோபர் 17 சனிக்கிழமை அன்று நடைபெறும். முன்னதாகவே வாக்களியுங்கள் எனவே நீங்கள் வரிசையில் நிற்பதற்காக குறைந்த நேரத்தை செலவிடுவீர்கள் — வாக்களிப்பதற்காக தேர்தல் நாள் வரை நீங்கள் காத்திருக்க தேவையில்லை.

| | |
|---|---|
| **வாக்களித்தல் ஆரம்பிக்கும் நேரம்:** | அக்டோபர் 3 சனிக்கிழமை காலை 9 மணி |
| **வாக்களித்தல் நிறைவுறும் நேரம்:** | தேர்தல் நாளான அக்டோபர் 17 சனிக்கிழமை இரவு 7 மணி |

### உங்களால் முடியுமெனில் உள்ளூரில் வாக்களியுங்கள்

வீட்டிற்கு அருகில் வாக்களித்தல் என்பது வேகமாகவும் எளிதாகவும் இருக்கும். நீங்கள் Aotearoa இல் உள்ள எந்தவொரு வாக்களிப்பு இடத்திலும் வாக்களிக்கலாம், ஆனால் உங்கள் தேர்தல் தொகுதிக்கு வெளிப்புறத்தில் வாக்களித்தால், நீங்கள் ஒரு கூடுதல் படிவத்தை நிரப்ப வேண்டியிருக்கலாம்.

### வாக்களிக்கும் இடங்கள் எப்போது திறந்திருக்கும்? மற்றும் அவற்றை எங்கே கண்டறிவது?

அக்டோபர் 3 சனிக்கிழமை முதல் தேர்தல் நாளான, அக்டோபர் 17 சனிக்கிழமை வரை எந்தவொரு வாக்களிப்பு இடத்திலும் நீங்கள் பொதுத் தேர்தல் மற்றும் பொது வாக்கெடுப்புகளில் பதிவுசெய்து வாக்களிக்கலாம்.

தேர்தல் நாளான அக்டோபர் 17ஆம் தேதி சனிக்கிழமை அன்று, அனைத்து வாக்களிப்பு இடங்களும் காலை 9.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை திறந்திருக்கும்.

**vote.nz** அல்லது **0800 36 76 56** என்ற எண்ணை அழைப்பதன் மூலம் வாக்களிப்பு இடங்கள் மற்றும் திறந்திருக்கும் நேரங்கள் பற்றிய தகவல்களைப் பெறலாம்.

### நீங்கள் இரண்டு பொது வாக்கெடுப்புகளிலும் வாக்களிக்கலாம்

நீங்கள் இந்த ஆண்டிற்கான பொதுத் தேர்தலில், இரண்டு பொது வாக்கெடுப்புகளிலும் வாக்களிக்கலாம். பொது வாக்கெடுப்பு என்பது ஒரு கேள்விக்கான வாக்களிப்பாகும்.

End of Life Choice Act 2019 (வாழ்வை முடிக்கும் தேர்வுச் சட்டம் 2019) அமலுக்கு வர வேண்டுமா என்று நீங்கள் வாக்களிக்கலாம், இது முற்றிய நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கருணைக் கொலை செய்யுமாறு கோருவதற்கான விருப்பத்தை அளிக்கிறது. கஞ்சாவின் கேளிக்கைசார் பயன்பாடு சட்டப்பூர்வமானதாக மாற வேண்டுமா என்பதற்கும் நீங்கள் வாக்களிக்கலாம்.

**referendums.govt.nz** என்ற தளத்தில் பொது வாக்கெடுப்புகளைப் பற்றி மேலும் அறியலாம்

### பதிவு செய்தல் மற்றும் வாக்களித்தல் பற்றிய மேலும் தகவல்களைப் பெறும் இடங்கள்

- **vote.nz** ஐப் பாருங்கள்
- **0800 36 76 56** என்ற எண்ணை அழையுங்கள்
- **facebook.com/VoteNZ** தளத்தைப் பாருங்கள்

இத்தகவல் யாருக்கேனும் உதவியாக இருக்கலாம் என்று உங்களுக்குத் தெரிந்தால், அவர்களுக்கு இதைப் பற்றிக் கூறுங்கள்.

பதிவு செய்தல் மற்றும் வாக்களித்தல் பற்றிய தகவலானது மற்ற மொழிகளில் **vote.nz** என்ற தளத்தில் கிடைக்கிறது.

# வாக்களிக்கும் முறை

## 1 ஒரு பேனா மற்றும் உங்களுடைய EasyVote அட்டையை எடுத்துக் கொள்ளுங்கள்

உங்களுடைய வாக்குச்சீட்டில் குறிப்பதற்காக உங்கள் சொந்த பேனாவைக் கொண்டு வரலாம். நீங்கள் மறந்துவிட்டால், கவலைப்பட வேண்டாம், அங்கு பேனாக்கள் கிடைக்கும்.

உங்களுடைய EasyVote அட்டையை எடுத்துச் செல்லுங்கள், ஏனெனில் இது வாக்களிப்பை விரைவாக்கும். உங்களுடைய அட்டையை மறந்துவிட்டால் அல்லது உங்களிடம் இல்லையென்றாலும் நீங்கள் வாக்களிக்கலாம்.




## 2 வழங்கப்படும் கை சுத்திகரிப்பானைப் பயன்படுத்தவும்

உங்களுடைய வாக்குச்சீட்டைப் பெறுவதற்கு முன், வழங்கப்பட்ட கை சுத்திகரிப்பானைப் பயன்படுத்தவும்.



## 3 வழிமுறைகளைப் பின்பற்றவும்

நீங்கள் என்ன செய்ய வேண்டும், எங்குச் செல்ல வேண்டும் என்பதை வாக்களிப்பு இடத்தில் இருக்கும் தேர்தல் பணியாளர்கள் காட்டுவார்கள். வாக்காளர்களுக்கு அதிக இடைவெளியை அளிக்க அவர்கள் வரிசைகளையும் நிர்வகிப்பார்கள்.




## 4 பொதுத் தேர்தலில் வாக்களித்தல்

பொதுத் தேர்தலில், நீங்கள் இரண்டு வாக்குகளைப் பெறுவீர்கள் - கட்சி வாக்கு மற்றும் வாக்காளர் தொகுதியின் வாக்கு.

### உங்களுடைய கட்சி வாக்கு

கட்சி வாக்கானது இது பாராளுமன்றத்தில் ஒவ்வொரு அரசியல் கட்சியும் பெறுகின்ற சீட்டுகளின் மொத்த எண்ணிக்கையைப் பெருமளவில் தீர்மானிக்கிறது. கட்சி வாக்கின் பெரிய பங்கைக் கொண்டுள்ள கட்சிகள், பாராளுமன்றத்தில் அதிக சீட்டுகளைப் பெறும்.

நீங்கள் பொதுப் பதிவில் அல்லது மாவோரிப் பதிவில் என எதில் இருந்தாலும், அரசியல் கட்சிகளின் அதே பட்டியலிலிருந்து தேர்வுசெய்ய வேண்டும்.

உங்களுடைய வாக்குச்சீட்டில், நீங்கள் விரும்பும் அரசியல் கட்சியின் பெயருக்கு அருகில் ஒரு டிக் குறியீட்டை இடவும்.




### உங்களுடைய வாக்காளர் தொகுதியின் வாக்கு

நீங்கள் வசிக்கும் பகுதிக்கு நாடாளுமன்ற உறுப்பினராக்க (MP) விரும்பும் வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பதே உங்களுடைய வாக்காளர் தொகுதியின் வாக்காகும். உங்களுடைய வாக்காளர் தொகுதியில் அதிக வாக்குகளைப் பெற்ற வேட்பாளரே உங்கள் வாக்காளர் தொகுதியின் MP.

நீங்கள் மாவோரி வாக்காளர் பட்டியலில் இருந்தால், மாவோரி வாக்காளர் தொகுதியில் ஒரு வேட்பாளருக்கு வாக்களிப்பீர்கள். நீங்கள் பொது வாக்காளர் பட்டியலில் இருந்தால், பொது வாக்காளர் தொகுதியில் ஒரு வேட்பாளருக்கு வாக்களிப்பீர்கள்.

உங்களுடைய வாக்குச்சீட்டில், உங்கள் உள்ளூர் பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்த விரும்பும் வேட்பாளரின் பெயருக்கு அருகில் ஒரு டிக் குறியீட்டை இடவும்.







கட்சி வாக்குகளின் இந்த விகிதம் = பாராளுமன்றத்தில் உள்ள இருக்கைகளின் அதே விகிதம்

## 5 பொது வாக்கெடுப்புகளில் வாக்களித்தல்

பொது வாக்கெடுப்புகளுக்கான உங்கள் வாக்குச்சீட்டில், பொது வாக்கெடுப்புக் கேள்விகளுக்குப் பதிலளிப்பதன் மூலம் வாக்களிக்கலாம். 'Yes' (ஆம்) அல்லது 'No' (இல்லை) என்பதற்கு அடுத்ததாக ஒரு டிக் குறியீட்டை இடவும்.

பொது வாக்கெடுப்புகளில் வாக்களிப்பது நம்முடைய விருப்பமாகும். நீங்கள் விரும்பினால் ஒரே ஒரு பொது வாக்கெடுப்பில் வாக்களிப்பதையும் கூடத் தேர்வுசெய்யலாம்.




## 6 உங்களுடைய வாக்குச்சீட்டுகளை வழங்கப்படும் வாக்குப் பெட்டிகளில் இடவும்

## 7 நீங்கள் வெளியேறுவதற்கு முன் கை சுத்திகரிப்பானைப் பயன்படுத்தவும்

வெளியேறும் வழியில், வழங்கப்படும் சுத்திகரிப்பானைப் பயன்படுத்தவும். அவ்வளவு தான் - வாக்களிப்பு முடிந்தது!



## வாக்களிப்பு இடத்திற்குச் செல்ல முடியாதா?

வாக்களிப்பு இடத்திற்குச் செல்வது கடினம் அல்லது சாத்தியமில்லை எனில், நீங்கள் இன்னும் வாக்களிக்க முடியும் என்பதை உறுதிப்படுத்த பல விருப்பங்கள் இருக்கின்றன.

நீங்கள் ஓய்வில்லத்தில் இருந்து, நீங்கள் வாக்களிப்பு இடத்திற்குச் செல்ல முடியாவிட்டால், வாக்களிப்புச் சேவைகளை ஏற்பாடு செய்வதற்கு உங்களுடைய உள்ளூர் தேர்தல் பொறுப்பதிகாரி உங்கள் ஓய்வில்லத்தின் மேலாளரைத் தொடர்புகொள்வார்.

நீங்கள் மருத்துவமனையில் இருப்பதனால் வாக்களிப்பு இடத்திற்குச் செல்ல முடியாவிட்டால், அக்டோபர் 3 முதல், உங்களுடைய வாக்குச்சீட்டுகளை ஒரு நண்பர் அல்லது குடும்ப உறுப்பினர் உங்களுக்காகக் கொண்டுவரலாம்.

உங்களால் உடல்நிலை சரியில்லாததால் அல்லது நடமாட முடியாததால் வாக்களிப்பு இடத்திற்குச் செல்ல முடியாவிட்டால், நீங்கள் வாக்களிப்பதற்கு உதவியைப் பெறலாம். உங்களுடைய விருப்பங்களைப் பற்றி பேச **vote.nz** என்ற தளத்தில் மேலும் கண்டறியவும் அல்லது **0800 36 76 56** என்ற எண்ணை அழைக்கவும்.

## வெளிநாட்டிலிருந்து வாக்களிக்கும் முறை

செப்டம்பர் 30 புதன்கிழமை முதல் அக்டோபர் 17 சனிக்கிழமை இரவு 7 மணி வரை (நியூசிலாந்து நேரம்), வெளிநாட்டிலிருந்து பதிவுசெய்து வாக்களிக்கலாம்.

பொதுத் தேர்தல் மற்றும் பொது வாக்கெடுப்புகளுக்கான உங்கள் வாக்குச்சீட்டுகளை **vote.nz** என்ற தளத்தில் பதிவிறக்கம் செய்து அச்சிடுவது வெளிநாட்டிலிருந்து வாக்களிப்பதற்கான எளிதான மற்றும் விரைவான வழியாகும்.

நீங்கள் வெளிநாட்டிலுள்ள வாக்களிப்பு இடத்தில் வாக்களிக்கலாம் அல்லது தபால் வாக்குச்சீட்டுகளை வெளிநாட்டிலிருக்கும் உங்களுக்கு அனுப்பும்படி கேட்கலாம். இந்த விருப்பங்கள் உங்கள் பகுதியில் உள்ள COVID-19 நிலைமையைப் பொறுத்ததாகும். வெளிநாட்டிலிருந்து வாக்களிப்பது குறித்த சமீபத்திய தகவலுக்கு **vote.nz** என்ற தளத்தைப் பார்க்கவும்.

வெளிநாட்டிலிருந்து வாக்களிப்பதற்கு உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், தயவுசெய்து எங்களைத் தொடர்புகொள்ளவும்.

**வெளிநாட்டிலிருந்து தொலைபேசி அழைப்பு:** +64 9 909 4182 (சர்வதேச அழைப்புக் கட்டணங்கள் பொருந்தக்கூடும்)

**நியூசிலாந்திலிருந்து தொலைபேசி அழைப்பு:** 0800 36 76 56

## உங்களுடைய வாக்குச்சீட்டுகளைப் படிக்க அல்லது குறிக்க உதவி தேவைப்படுகிறதா?

நண்பர், குடும்ப உறுப்பினர் அல்லது தேர்தல் அதிகாரி உங்களுடைய வாக்குச்சீட்டுகளைப் படிக்க அல்லது குறிக்க உங்களுக்கு உதவலாம். அந்த நபர்:

- உங்களுடன் வாக்களிப்புத் திரைக்குப் பின்னால் செல்லலாம்
- வாக்களிப்புச் சீட்டுகளிலுள்ள சொற்களையும் தகவல்களையும் படிக்கலாம்
- நீங்கள் அவர்களிடம் கேட்டால் உங்களுக்காக வாக்குச்சீட்டுகளைக் குறிக்கலாம்.

பொதுத் தேர்தலில் நீங்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் அல்லது பொது வாக்கெடுப்புகளில் நீங்கள் எவ்வாறு வாக்களிக்க வேண்டும் என்பதை அவர்களால் கூற முடியாது.

நீங்கள் பார்வையற்றவராகவோ, பகுதியளவு பார்வையற்றவராகவோ அல்லது உடல் ஊனமுற்றவராகவோ இருந்தால், அதாவது உங்கள் வாக்குச்சீட்டுகளை உதவியின்றி குறிக்க முடியாதவராக இருந்தால், தொலைபேசிக் கட்டளைச் சேவையைப் பயன்படுத்தி வாக்களிக்கலாம்.

இந்தச் சேவையைப் பயன்படுத்த நீங்கள் பதிவுசெய்ய வேண்டும். **0800 028 028** என்ற எண்ணை அழைக்கவும் மற்றும் பதிவுசெய்ய விருப்பம் 1 ஐத் தேர்ந்தெடுக்கவும்.

நீங்கள் செப்டம்பர் 14ஆம் தேதி திங்கட்கிழமை முதல் அக்டோபர் 15ஆம் தேதி வியாழக்கிழமை இரவு 7 மணி வரை பதிவுசெய்யலாம்.

இந்தச் சேவையைப் பற்றி மேலும் அறிய **vote.nz** என்ற தளத்தைப் பார்வையிடவும்.